# போர்க்காதல்

# போர்க்காதல்

## நாடகம்

### அறிமுகம்

எந்தையாரின் அழகிய கையெழுத்துப் படியாகக் கிடைத்த இந்த நாடகம், "பீலிக்குடி" என்ற ஊர்ப் பெயரில் தொடக்கமாகிப் பதின் மூன்று காட்சிகளில் நிறைவுறாமல் நிற்கிறது.

பொன்னிறம் வீசிடும் மயிலிறகுக் கண்களும், கரும்பச்சைக் கதிர்களின் வீச்சும், மென்மையுமாய் நம் கண்ணைக் கவரும் மயிற்பீலி, அதனைப் போன்றே மென்மையான சொல்லாட்சியுடன் இயன்றிருக்கிறது இச்சிறு நாடகம். "போர்க்காதல்" எனும் தலைப்புக்குப் பொருத்தம் காண இயலாமல் இறுதிநிலை தெரியாமல் கிடைத்திருப்பதால் உறுதியாய் மதிப்பீடு செய்ய இயலவில்லையே என்கிற ஏக்கம் என்னுள் எழுந்தது.

காலச்சூழலை ஒருவாறு கணித்தால், முடிவை நம் கற்பனையில் கண்டுகொள்ள வழி தோன்றும் என்கிற ஆவல். தன்மனங்கவர்ந்த பொற்கிளை என்னும் மங்கையைத் தாம் திருமணம் புரிந்துகொள்ள முடியாமல் தடுத்தார் தந்தை; மகன் சொக்கன், மனம் வெதும்பிச் செய்வ தறியாது திகைத்தான். எனை ஈன்ற தந்தையும், தாயும் மனம் குளிர்ந்து வாழட்டும் என்றெண்ணி ஊரைவிட்டு அகன்று துறவுக் கோலம் பூண்டு அண்டை நகர் சென்றடைகிறான். துன்பமற்ற நிலை எய்த வழி என்ன? ஆன்றோரைத் தேடியபோது, "நரி" ஒருவன் வழிகாட்டப், போலி ஒருவரின் முன் போய் நிற்கிறான். அவர்களின் பணம் பறிக்கும் திட்டம் வெளிப்படவே, அங்கிருந்து வேறு சான்றோரை நாடி நல்லுரை பெறுகிறான். இங்கே நாடகம் நின்று போயிருக்கிறது.

முதலில் சந்தித்த நரியின் பெயர் கண்ணன். அந்தப் போலியின் பெயர் பாரதியார். சந்தித்த இடம் "ஆசிரமம்" போலியின் உரையிலிருந்தும் பெயரைக் கொண்டும் என்னுள் ஒரு கருத்து மின்னிற்று.

குடும்ப விளக்கு, இரண்டாம்பகுதியில், முதியவர் மாவரசர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை வரிசையாய் எடுத்துக் கூறுகிறார். "ஆசிரமம்" எனும் குறுந்தலைப்பில் வரும் பகுதி.

ஆசிரமப் பேரால்
அறவிடுதி கண்டு நல்ல
பேச்சியம்பிச் சொத்தைப்
பெருக்கியே - போய்ச்செல்வர்
கூட்டம் பெருக்கிக்
குடித்தனத்தைக் தாம் வளர்த்தார்

என்று விவரிக்கும் மாவரசர்,

திருமால் பிறப்பென்று
தீட்ட நூல்விற்க
வருவாய் விழுக்காடு
வாங்க ஒரு நரியார்

வீட்டிலும் அந்நரிக்கும்
பொய்புரட்டு வேலைக்கோ
ஆட்டுக்கண்ணன் சேய்
அவனொருவன் - நாட்டில்
துறவோன் அறவீ(டு)
இஃதொன்று....

இவ்வாறு தொடர்கின்றார் மாவரசர். அவர்தான் நம் பாவரசர்.

மாவரசர் செப்பும் அத்துணை நிகழ்ச்சிகளும் எந்தையாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளே என்பதைப் பலபட விரித்துரைக்க நான் கேட்டிருக்கிறேன்.

நெல்லை மாடசாமியைக் காத்ததும், "பாவல்லார்" பாரதியார் சொற்படி உருவான பாரததேவி உருவப்படமங்களைத் தோளிற் சுமந்து சென்னைக்குச் சென்றதும், இரவில் பார்த்த தெருக்கூத்தின் பாடலைப் பள்ளியில் பாடிப் பிரம்படி வாங்கியதும் அக்கால இளையவரான சுப்புரத்தினத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகளே!

பிற்காலத்தில், தம்மைச் சூழ்ந்திருந்த உலகப் போர் நிலவரங்களாலும், தம் ஊரில் இருந்த போலிகளின் அடாத செயல்களாலும் நொந்து மன உணர்வுகளை வடித்திருக்கிறார்.

இனி நான் கூறப்போகும் செய்திகள் அப்பட்டமான உண்மை நிகழ்ச்சிகள், கற்பனை, எள்ளின் மூக்களவும் கலப்பற்றவை. நான் நிறுவிட விரும்பும் முடிவுக்கு ஆதாரம் காட்டவே இவற்றை விவரிக்க நேர்ந்தது.

அரவிந்தர் புரட்சியாளராக உருவெடுத்துச் சிறையேகி, பாரதியின் அழைப்பிற்கிணங்கப் புதுச்சேரி வந்து சேர்ந்தார்.போராட்டப் போக்கைக் கைவிட்டு ஆன்மா, யோகம், போன்ற கருத்துகளில் மூழ்கியதால் ஆசிரமம் உருவெடுத்தது. பாரதியார் இங்கிருந்தபோது அரவிந்தரை நாள்தோறும் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார். உடன் எந்தையாரும்! ஆசிரமம் என்ற அமைப்பு ஏற்பட்ட பின்னர், அந்தக் கட்டுக் கோப்பின் போக்கில் கருத்தூன்ற முடியாத நிலையில் அரவிந்தரைச் சந்திப்பது நின்று போயிற்று. பாரதியும் தம் காலத்தின் தொடர்பை நிறுத்திவிட்டார்.

ஆசிரமக் கட்டுக்கோப்பு பற்றி உள்ளூரில் பற்பல முறையீடுகள் அவ்வப்பொழுது எழுந்து வந்திருக்கின்றன.

கவியோகி சுத்தானந்தர் ஆசிரம சீடராக வந்து, தமிழ்நூல் பதிப்புப் பொறுப்பும் ஏற்றார். தம் நூற்களையும் பதிப்பித்தார். புதுவ வ "பாரத சக்தி நிலையம்" பாலசுப்பிரமணியம் என்பாரின் துணையுடன் புதுக்கோட்டை அன்பு நிலையம் என்ற அமைப்பின் ஆதரவுடன் சுத்தானந்தரின் நூற்கள் பெருமளவில் செட்டிமாா நாட்டில் விற்றன. இந்த வணிகத் தொடர்பு ஆசிரம நிருவாகத்தைச் சீண்டவே, சிக்கல் முளைத்தது. அதுவரை தம்மைக் காணவரும் அன்பர்களிடம் அரவிந்தர் கிருஷ்ணாவதாரம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர், சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டத் தொடங்கினார். நல்லுறவு இருந்த காலத்தில், வெளியூரிலிருந்த தமிழ் அன்பர்கள், பாரதிதாசனைப் பார்க்கப் போகிறோம் என்று வாய் தவறிச் சொல்ல சேர்ந்தால், யோகியார் சீற்றம் கொள்வார். புத்தக வணிகத் தொடர்பில் சிக்கல் தோன்றியபோது, பாலசுப்பிரமணியம் எந்தையாரிடம் வந்து சேர்ந்தார். "அங்கே நடக்கும் அநியாயங்களை" மணிக்கணக்கில் சொல்லிக் காட்டுவார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து, "அப்போ யாபாரம் படுத்துட்டுதோ" என்பார் தந்தையார் கிண்டலாக!

மாலைவேளையில் வந்து மாலைமாலையாய் கண்ணீர் சொரிவார் பாலசுப்பிரமணியம்.பின், கெஞ்சல், கொஞ்சல்! தம் அச்சகம் வேலையற்றுப் போக நேரிடும், பதிப்பகம் பல இழப்புகளைச் சந்திக்க நேரிடும் என்றெல்லாம் விவரித்துச சொல்லச் சொல்ல எந்தையார் நெகிழ்ந்து போவதை அறிந்த பாலசுப்பிரமணியம் "வாத்தியாலே, திருமண முதலிய விழாக்களில் செட்டிமார் நாட்டில் பல்லாயிரம்

சிறுநூற்கள், தம் பெயரில் பொறித்து அன்பளிப்பாக வழங்குவது இப்போதும் நடைமுறையில் உள்ளது. நீங்கள் ஏதாவது எழுதிக் கொடுங்களேன்!" என்றார். தலையாட்டிவிட்டார் எந்தையார்.

"குடும்ப விளக்கு" ஒளி வீசிற்று. சிறிய வடிவத்தில் பல்லாயிரம் படிகள், கலிக்கா கட்டு என்ன, வெல்வெட் துணிக்கட்டு என்ன, பொன்னிற எழுத்தோடு தோற்கட்டு என்ன, செட்டி நாட்டில் எந்தையாரின் "குடும்ப விளக்கு" விரைந்து விற்பனை ஆயிற்று. தொடர்ந்து "இசையமுது" விற்பனையில் உச்சத்தை எட்டிற்று!

சுத்தானந்தரின் சீற்றம், சுப்புரத்தினத்துக்கு ஏற்றம் அளித்த தென்றால் மிகையன்று. சுத்தானந்தருக்கும், ஆசிரம நிர்வாகத்துக்கும் இடையே அறுந்து போயிருந்த "உறவு - இழை" மீண்டும் இணைந்து கொண்டதால், பாலசுப்பிரமணியம் தாம் பெற்றிருந்த வெளியீட் டுரிமையைச் செட்டிநாட்டு அன்பர் ஒருவருக்கு விற்றுவிட்டார். "குடும்பவிளக்கு" மூலம் எங்கட்கு உரிமைப் பணமாக ரூபாய் நூறு மட்டுமே கிடைத்தது. "இசையமுதுக்கு" அதுவும் இல்லை.

அதனால் "இசையமுது" இரண்டாம் பதிப்பை வேறு பதிப்பகத்தார் மூலம் வெளியிட்டோம்.

பாலசுப்பிரமணியம் நம் வீட்டுப் பக்கமே தலைகாட்டுவதில்லை.

எதிர்பாராத இந்தத் திருப்பம் ஏற்பட்டபோது புதிய வெளியீட்டு முயற்சிகள் தொடங்கப்பட்டுவிட்டதால் எந்தையார் இந்த உறவைத் துடைத்தெறிந்துவிட்டதில் வியப்பு ஏதும் இல்லை. இந்த பாலசுப்பிர மணியத்தின் குடும்பப்பெயர் "ஆட்டுக் கண்ணன் வீடு" என்று எக் காரணத்தாலோ வழக்கில் வந்திருக்கிறது. குடும்பவிளக்கு இரண்டாம் பகுதியில் நான் எடுத்துக் காட்டிய இடத்தில், "ஆட்டுக்கண்ணன் சேய்" என்று சொல்லப்பட்டதையும், இந்தப் போர்க்காதல் நாடகத்தில் ஒரு பாரதியார் வருவதையும், கிருஷ்ணாவதாரம் பற்றி உரையாடுவதையும் நம் நினைவிற் கொண்டு வந்தால், நாடகம் எழுதப்பட்ட காலம் எதுவாக இருக்கலாம் என்பதற்கு ஓர் வரையறை கிடைக்கிறது.

குடும்பவிளக்கு முதற்பகுதி வெளிவந்த 1942-ஆம் ஆண்டிற்குப் பிற்காலம். இரண்டாம் பகுதிக்கு முற்பட்ட காலம்.

அது இரண்டாம் உலகப் போர்க்காலம். போரில் மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என நீதிக்கட்சியின் தலைவர்கள் பங்கேற்ற

நிகழ்ச்சிகள் மிகுந்திருந்த நேரம். "விடுதலை" நாளேடு சென்னையில் போர் ஆதரவு ஏடாக - நேசநாடுகளின் குரலாக மாறியிருந்த காலம்.

1942-ஆம் ஆண்டில் "சக்தி" மாத இதழுக்கு எந்தையார் "குடியானவன்" என்று தலைப்பிட்டு ஒரு பாடலை அனுப்பினார். பேராயக் கட்சி சார்ந்த அந்த இதழின் ஆசிரியர் வை.கோவிந்தன். போர் ஆதரவுப் பகுதியை நீக்கித்தர வேண்டினார். எந்தையார் மறுத்துவிட்டார். அந்த இறுதிப்பகுதி:

மெத்தைவீடு மென்மை ஆப்பிள்
முத்தரிசி, பாலில் முழுக்கியசோறு
விலைதந்து தன்புகழ் விதைக்கும் ஆட்கள்
இவற்றினின்றுதான் இன்பமும் அறமும்
துவங்கும் என்று சொல்லல் பொய்ம்மை!
இதை அவன் கண்டதில்லை, ஆயினும்
அக்குடியானவன் எழுந்தான்
நிற்கவில்லை! நிறைந்தான் போரிலே!

இட்லரின் பிடி உருசிய நாட்டில் இறுகியபோது நாட்டுப்பற்று மிகுந்த உருசியர் தன்னலம் துறந்து, போர்ப்படையை வலிமை உடையதாக்கிச் சீறி எழுந்து வெற்றி பெற்றனர். அந்த நாட்டுக் குடியானவனும் போரில் நிறைந்தான் என்ற கருத்தை மாற்றித்தர வேண்டினார் வை.கோவிந்தன். மறுத்தார் எந்தையார். 1943-ம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்தது இது.

பாரிசு நகரம், இட்லரின் முற்றுகையை முறியடித்து வெற்றி பெற்றதைக் கொண்டாடிய புதுவை நிகழ்ச்சியில் எந்தையார் பாடிய வாழ்த்துப் பாவின் தொடக்க வரிகள் இவை:

வெண்ணிலா முகிலினின்று
மீண்டதுபோலே மீண்டாய்
எண்ணிலா மகிழ்ச்சியூட்டும்
எழில் பாரிஸ் நகரே நீதான்!
கண்ணிலா இட்லர் நின்பால்
கால் வைத்தான், தோல்விபெற்றான்!
மண்ணுளார் துயரினின்று
மீண்டனர், மகிழ்ச்சியுற்றார்.

01.10.1944-இல் இந்த விழா நடைபெற்றது. உலகமெங்கும் போர்க்குரல் எழுந்த சூழலில், மக்களை அடியோடு தீர்த்துக் கட்டும் தீயோர்களை எதிர்கக மககள் முன்வரவேண்டும் என்ற கருத்தை இந்தக் கவிஞர் ஏற்றுக்கொண்டு, தம் படைப்புகளில் அந்தக் கருத்துக்கு ஆக்கம் தருகிறார். உள்ளூரில் நடைபெறும் முறைகேடுகளைக் கண்டித்தும், போலிகளின் முகத்திரையைக் கிழித்தும் தம் சமுதாயத் தொண்டை ஆற்ற விரும்புகிறார்.

இவற்றையெல்லாம் ஒருசேர எண்ணிப் பார்த்தால், இந்தப் "போர்க் காதல்" நான் முன்பே குறித்தபடி 1944 - 45 கால எல்லைக்குள் எழுதப் பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். நாடகத்தின் இறுதிக் காட்சியாக இங்கே அமைந்துள்ளபடி கருத்துக்கள் நம் முடிவை உறுதி செய்கின்றன.

காலவரம்பு எப்படியிருந்தாலும், "போர்க்காதல்" கற்கண்டுத் தமிழ் நடையிலே காதலில் தொடங்கிக், கனிச்சுவை ஆறாய்ப் பெருகிப் பின் காரச்சாடலாகவும், முடிவில் சான்றோர் அறிவுரைத் தண்மையில் நிறைவேறுகின்றது.

சரி, இறுதிக்காட்சி எப்படி இருக்கலாம்?

கதைத் தலைவன் சொக்கன், மன அமைதி பெற்றுத் தன் சொந்த ஊரான பீலிக்குடிக்கு வந்து காதல் பொற்கிளையை மறந்து, உழைப்பின் பெருமையையும், ஈகையின் உவகையையும் பெற்றான். பொதுநலத் தொண்டில் புகழ் உற்றான் என்றோ.

அல்லது உழவுத் தொழில் மேம்பாட்டுக்கு உழைத்தான்.

அல்லது

போர்ப்படையிலே சேர்ந்தான்.

என்றோ.

பொதுநலம் பேணும் துறவை மேற்கொண்டான், தொழிலாளர் நலப்போரில் இறங்கினான் என்றோ - இறுதிக் காட்சி அமைக்கலாம்!

எந்தையார் என்ன எண்ணியிருந்தாரோ, ஏடுகள் கிடைக்க வில்லை.

கிடைத்த ஏடுகளில் நம் கருத்தைப் பதிக்கலாம் வாருங்கள்.

ஓர் ஐயத்தை நண்பர் ஒருவர் எழுப்பினார்: முற்றுப்பெறாத இந்தக் கையெழுத்துப் படியை வெளியிடத்தான் வேண்டுமா? என்றார் நண்பர்.

பாவேந்தரின் படைப்புத் திறன், காலமாற்றத்திலும் களம்மாறாத் திண்மை, கருத்து வளர்ச்சி, சொல்லாட்சி போன்றவற்றை நாட்டு மக்கள் அறியும் வண்ணம் இப்படி ஒரு முயற்சி. குறிப்பாக ஆய்வு மாணவர்க்கு அரும் பெட்டகமன்றோ? அனைவரும் ஆதரிக்க!

**- மன்னர்மன்னன்**

## காட்சி - 1

பீலிக்குடி என்னும் சிற்றூரில் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந் திருக்கிறார். வெற்றிலைப்பெட்டியுடன், வேல் வருகிறான் வெண்ணூர் நகரத்திலிருந்து.

சீனி : வாயேன் தம்பி, சொக்கனைப் பார்க்க வந்தாற் போலிருக் கிறது. அவன் இல்லை, கொல்லையில் மரம் வெட்டுகி றார்கள். அங்கே போயிருக்கிறான்.

வேல் : மரம் வெட்டும் வேலையை மேற்பார்க்கவா? நன்றாயிருக் கிறது; சீக்கிரம் அழையுங்கள்.

சீனி : அப்படிப்பட்ட அவசரமா?

வேல் : நீங்கள் கூப்பிட்டனுப்புங்கள்.

சீனி : சரி, அங்கே யாரடா? செங்கான். நீ அங்கே இருந்து கொண்டு சின்ன ஐயாவை இங்கே அனுப்பு. வேலப்பர் தேடி வந்திருக்கிறார் என்று சொல்லி. ஓடு! உட்கார் தம்பி, என்ன சேதி?

வேல் : சொக்கன் ஓர் கபோதி. இவ்வளவு படித்தும் அவன் உத்தி யோகம் இல்லாதிருக்கிறான்.

சீனி : இருக்கிறான். கேட்டால் சிரிக்கிறான்.

வேல் : காமாட்சி உயர்நிலைப்பள்ளியில் ஒருவருக்கு இடம் இருக்கிறது.

சீனி : இவன் வாத்தியாய் இருக்க ...

வேல் : நேர்த்தியானவன் ஆயிற்றே!

சீனி : அதோ அவனும் வந்து விட்டான்.

வேல் : வா சொக்கு.

சொக்கு : நலந்தானே?

வேல் : படித்த நீ. மரம் வெட்டப்போவது முறையா?

சொக்கு : அது என்ன குறைவா?

வேல் : உன்னோடு படித்துத் தேர்ந்தவர்களில் நான் உட்பட அனைவரும் வேலையில் அமர்ந்துவிட்டோம். நீதான் பாக்கி

சொக்கு : இப்போதோவது கிராக்கி...

வேல் : இல்லாமலா!

சொக்கு : என்ன?

வேல் : சொல்லாமலா? நம் காமாட்சி உயர்நிலைப் பள்ளியில் ஓரிடம் காலி.

சொக்கு : என்ன கூலி?

வேல் : கூலியா? அப்போதென்ன நாங்களெல்லாம் கூலிக்காரர்களா?

சொக்கு : உனக்காக வேண்டுமானால் எசமான்கள் என்று சொல்லு கிறேன்.

வேல் : விண்ணப்பம் போடுகிறாயா? இல்லையா?

சொக்கு : காமாட்சி உயர்நிலைப்பள்ளியில் என்னை ஆசிரியராக்கும் படிதானே?

வேல் : தப்பா?

சொக்கு : அப்பா, நீ என்மீது வைத்துள்ள அன்புக்கு நன்றி. ஆனால் நான் படித்தது உத்தியோகம் பார்க்க அல்ல. என் பயிர்த் தொழிலைத் திறமையுடன் பார்க்க, உன்னை ஒன்று கேட் கிறேன். படிப்பது உத்தியோகத்திற்கா? அப்படியானால் நாலுகோடித் தமிழரும் படித்து உத்தியோகம் உத்தியோகம் என்று உயிரை விட்டால் பயிரிடுதல் முதலிய பிற தொழில் களின் நிலை என்ன? உனக்கு உன் உத்தியோகத்தால் ஏற்படும் ஆதாயம், பெருமை, இன்பம் எனக்கு என் பயிர்த் தொழிலால் கிடைக்காது என்று நினைக்கிறாயா? படிப்பு அறிவுக்கு.

பயிர்த் தொழிலாளி படித்திருக்க வேண்டும். தொழிலாளி எவனுக்கும் படிப்பே உயிர். படிக்காதவன் செய்யும் எந்த வேலையும் உருப்படாது. இன்று தொழில்கள் தாழ்நிலையில் வைத் தெண்ணப்படுவதற்குக் காரணம் அவைகள் படிக்காதவர்களால் நடத்தப்படுவது தான்.

கரம்பாகக் கிடந்த எங்கள் நிலத்தையெல்லாம் பிடி எருவும் வேண்டாது விளையும் உயர் நஞ்சையாக்கி னேன். இதோ இருக்கிறார் அப்பா. கேட்டுப்பார். நன்செய்ச் சாகுபடியில் ஒருபுது முறை. ஒட்டிக்கிரட்டி விளைவு.

எங்கள் கலப்பை முன்போல் இல்லை. இன்னும் கேள். எதற்கும் உதவாதென்றிருந்த கட்டாந் தரையில் கற்கண்டுக் கனி ஒட்டு மாமரங்கள் கொட்டுமே ஆண்டுக்கு ஆயிர ரூபாய் எதிர்பாராத வரும்படி. எதற்கு என்னைக் காமாட்சிப் பள்ளியில் குந்தி ஈயடிக்கச் சொல்லுகிறாய். வசதியில்லாத அறிஞர்கட்கு உத்தியோகத்தை விட்டு விடுவோம். எழுந்திரு! கைகால் கழுவிக் கொள்! சாப்பிடலாம்.

சீனி : மெய்தானே வேலப்பா?

சொக்கு : பொய்தான் என்கிறாயா வேல், இன்னும்!

வேல் : இல்லையில்லை. எண்ணம் இருக்குமோ என்று.....

சொக்கு : பார்த்தாயா, உன் ஐயப்பாடு தீர்த்தாயா? நான் உன் நிலைக்கு வருந்துகிறேன். உனக்குள்ள நாற்பது காணிக் கண்ணான நன்செய்யைக் குத்தகைக்கு விட்டுவிட்டுச் செத்ததற்கு எழுதும் உத்தியோகத்தில் தொத்தி மாதம் பத்து ரூபாய் முத்தாகச் சம்பாதிக்கிறாய் ஒத்தாப்போல் பத்துத் தென்னை கொடுத்து விடும் அத்தொகையை! இதில் என்ன தொல்லை? அதிகாரி கட்குக் கைகட்டிப் பதில் சொல்லுவது கொஞ்சமா? சட்டை, குல்லாய், குட்டை, குடை பட்டுச்சோடு இவற்றை அணிந்து உத்தியோகசாலை போவதில் ஓர் ஆவல். மேலும் அதன் பேர் முன்னேற்றம். உள்ளே பார்த்தால் ஏமாற்றம்.

வேல் : நான் இதையெல்லாம் யோசியாதது வெட்கக் கேடுதான். ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக் கடை, என்பதையும்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழு துண்டு பின் செல்பவர் என்பதையும் படித்தேன்.

சொக்கு : படித்தேன். அந்தப் படித்தேனை ஏன் மறதியில் வடித்தாய்?

வேல் : சொக்கு, உன் அறிவுரையால் என் வாழ்க்கையிலேயே ஓர் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டாய்.

சொக்கு : மாற்றத்தை அல்ல முன்னேற்றத்தை என்று சொல்லு!

வேல் : ஆம், அதுவும் உண்மை.

(போகிறார்கள். உணவுண்டு வெளிவருகிறார்கள்)

வேல் : நான் ஊருக்குப் போய்வருகின்றேன்.

சொக்கு : இரண்டு நாட்கள் இருந்து போகலாமே.

வேல் : இல்லை.

சொக்கு : பழமலை, பூங்கா, சோலை மூவரையும் அழைத்துக் கொண்டு நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே வரலாமே?

வேல் : சரி, கட்டாயம் வருகிறோம்.

சொக்கு : நிச்சயமாக?

வேல் : நிச்சயமாக.

சொக்கு : எதிர்பார்த்திருப்பேன்.

வேல் : உறுதி என்கிறேனே.

சொக்கு : சரி.

(போதல்)

## காட்சி - 2

மறுநாள் காலை சொக்கன் தன் வீட்டின் கீழ்ப்புறத்தில் இருக்கும் தொழுவத்தை யடுத்து அமைக்கப்பட்டிருக்கும் கல் தொட்டிகளில் வண்டி மாடுகளுக்குத் தீனி வைக்கிறான். அவன் வாய் மெதுவாகப் பாடிக் கொண்டிருக்கிறது.

உயர்ந்த நிலை தவறிவிட்டால்
ஒருபடிக் கீழ் இறங்கு - நெஞ்சே
அயர்ந்திடாமல் வேறு தொழில்
அப்போதே தொடங்கு!
துயரமென்று சொல்வதெல்லாம்
சோம்பலுக்கோர் பேராம் - நெஞ்சே
உயர்ந்தநிலை அத்தனைக்கும்
ஊக்கமொன்றே வேராம்.

தொழில் துறையில் உயர்வுதாழ்வு
சொல்லுவது மடமை - நெஞ்சே
பிழைஇலாமல் எத்தொழிலும்
பேணுவது கடமை!
தொழில் புரிவாய் தொழில் புரிவாய்
துரத்து வறுமைக் காட்டை - நெஞ்சே
எழில் புரிவாய் எழில் புரிவாய்
இனிய தமிழ்நாட்டை

(இதற்குள் அவ்வூர் வீரப்பன் அவ்வழி வருகிறான்)

வீரப்பன் : ஏன் தம்பி சொக்கு, மாட்டுத் தொழுவம் கட்டியாயிற்றா.

சொக்கு : முடிந்தது. ஏன் இத்தனை பெரிது என்கிறீர்களா? மூன்று பசுக்கள், இரண்டு ஜதை வண்டி மாடுகள், உழவு மாடுகள் அதிகம் இருக்கின்றன, கட்டுத் தரை ஒத்தாற்போல் இருக்க வேண்டும், ஒரு நாள் தொழுவத்தின் கட்டுத் துறைகளைக் கழுவும்போது அதற்கு முன் கழுவிக் காய்ந்த தரை தயாரில் இருக்க வேண்டும். ஈ, கொசுக்கள்

அண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தொழுவம் கட்டி முடிக்க 2,000 ரூபாய் சென்றது. ஒழுங்காகப் பாதுகாக்கப் படும் மாடு நோயின்றி நீண்ட நாட்கள் உழைக்கும். பசுக்கள் அதிகம் கறக்கும். பாலும் நோயற்றதாக இருக்கும். மாட்டுத் தொழுவம் மட்ட இனமாகத் தோன்றலாம் ஆயினும் பயிரிடுவார் வாழ்வு மாட்டுத் தொழுவத்தைப் பொறுத்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

வீரப்பன் : ஆமப்பா, அதுமட்டும் உண்மை. நானும் அப்படித் தான் செய்ய வேண்டும். பயிரிடுவோனுக்குக் கல்வி இன்றியமை யாதது என்பதற்கு நீ ஓர் உதாரணம் தம்பி, நான் வருகிறேன்.

சொக்கு : நல்லது.

(போதல்)

(மாடுகள் தீனி தின்கின்றன. எதிர்த்த சரகில் ஆள் உயரத்தில் எழுப்பப்பட்டுள்ள மதிற் சுவரின் உட்புறமிருந்து ஓர் கிளி பறந்து வெளியில் போகிறது. அந்தக் கிளிக்காக, அவ்வீட்டின் மங்கை. பொற்கிளை மதிற்சுவர்மேல் தலை நீட்டுகிறாள். நீட்டியவள் கிளியை மறந்தாள். சொக்கனைக் கண்ட அவள் விழிகளை அவள் மீட்க முடியாமல் இருக்கிறாள். சொக்கன் பார்க்கவில்லை. ஆயினும், தொழுவத்தில் சிட்டொன்று தன் பெட்டையுடன் பிணங்கிச் சட்டென்று மதிற்சுவரின் பக்கம் பறந்ததை நோக்கிய சொக்கன், சிட்டை மறந்தான். மதிற் சுவரின்மேல் வட்ட நிலாவைக் கண்டான். அவன் விழி அவள் விழியிற் பட்டது. கட்டழகி மறைந்தாள். மற்றொருமுறை அவள் காட்சி தர மாட்டாளா என்று மதிலில் இட்ட விழியை எடுக்கா திருந்தான் சொக்கன்.

மாடுகள் தீனி தின்றுவிட்டன. சற்று நின்று பார்த்தன. பின், தாமே தம் இடம் நோக்கி நகர்ந்தன.

எதிரில் வந்த செங்கான் என்னும் சொக்கனின் காரியக் காரன் சொக்கனை நோக்கி...

செங்கான் : ஏன் நிற்கிறீர்கள்?

சொக்கு : (மதில் மேல் வைத்த பார்வையைச் செங்கான் மேல் திருப்பி)

மாடுகள் தீனி தின்கின்றன.

செங்கான் : மாடுகள் உங்களை எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று நினைத்துத் தாமே தம் இடம் நோக்கிப் போய்விட்டன.

சொக்கு : அடா! இல்லை. இங்கிருந்து பறந்தோடிற்றுப் பொற்கிளை - அல்ல, சிட்டு, சிட்டு.

செங்கான் : அதைப் பார்த்து வேர்த்து நிற்கிறீர்களா?

சொக்கு : வேர்த்தா நிற்கிறேன், இல்லையே

செங்கான் : எண்ணிப் பாருங்கள் உங்கள் சொல்லையே.

சொக்கு : சிட்டு என்று சொல்வதற்குப் பொற்கிளை என்று சொல்லி விட்டேன் மறந்து!

செங்கான் : அப்படிச் சொல்லுங்கள் திறந்து! சின்னஞ்சிறுசாய்ப் பார்த்தீர்கள் அப்போது! பொன்னின் சிலைபோல் பார்த்தீர்கள் இப்போது.

சொக்கு : செங்கான்! செங்கான்!! வான்மேற் பறந்த ஒரு கிளிக்கு மதிற்மேற் கண்டேன் முக விளக்கு!

குவளை விழியிமைகள் கொட்டாமற் பார்த்தாள் அவளை நான் பார்த்தேன் அகன்றாள் - கவலையுற்றேன்! வாக் கெடுத்துப் பின்னி மணிநாகம் போல் துவளும் பூங் குழலாளைக் கண்ட போதுதான் - நாக்குளறி நின்றேனே! மங்கை நிலா முகத்தைப் பார்த்தவுடன் ஒன்றும் உரையா திருந்தேனே! - அன்று, தெருவில் விளையாடித் தின் பண்டம் வாங்கி ஒருவர்க்கொருவர் உதவித் - திருநாளில் பட்டாடை கட்டிப் பல கதைகளும் பேசிச் சிட்டாய்ப் பறந்து திரிந்திட்ட - கட்டங்கள் என் நினைவில் இன்னும் இருப்பதுபோல் பொற்கிளை தன் நினைவில் தட்டுப்படு மன்றோ? - இன்னொரு நாள் மங்கையை நான் பார்க்கும் வகை வாய்க்குமோ வாய்க்காதோ செங்கான், நான் தும்பி! அவள் தேன்!

செங்கான் : வழி செய்வேன் நான்! அதோ அந்தக் கிளிதானே பொற் கிளையுடையது?

(அதைக் கைப்பற்றுகிறான்)

சொக்கு : உன் முரட்டுக் கையால் அதை ஒன்றும் செய்யாதே.

செங்கான் : மாந்துளிரை ஏந்துவதுபோல் ஏந்திச் செல்வேன்.

சொக்கு : அந்தக் கனியிடத்திலா? சரி அவளைத் தனியிடத்தில் சந்தி.

செங்கான் : இதைக் கொடுத்து?

சொக்கு : அவளைச் சரிப்படுத்து, மறக்காதே.

செங்கான் : பறக்காதே, வந்துவிட்டேன்.

(போதல்)

## காட்சி - 3

தன் வீட்டின் கொல்லையில் சொக்கன்மேல் நினைவோடு பொற்கிளை நிற்கிறாள். கிளியுடன் செங்கான் செல்லுகிறான்.

பொற்கிளை : எங்கிருந்தது. நீர் எதிர்த்த வீட்டின் காரியக்காரா?

(கிளியை வாங்கிக் கொள்ளுகிறாள்)

செங்கான் : (மெல்லிய குரலால்) எதிர்வீட்டில் சின்ன ஐயா இருக்கிறாரே அவர்தாம் சொக்கு! கிளி அவர் கண்ணிற் பட்டது. பிடித்தார். அது உங்களுடையது என்று அவருக்குத் தெரியும் போலிருக்கிறது. அதற்கு முத்தங் கொடுத்தார். முப்பழம் கொடுத்தார். அவர் சித்தம் களித்ததை என்னென்று செப்புவேன்!

பொற்கிளை : கொல்லையில், என் கையில் கொஞ்சிய இக்கிளி நில்லாது மதிற்சுவர்க்கப்பாற் பறந்தது. பார்த்தேன் எட்டி! அவரைப் பார்த்தேன். அவரும் என்னைப் பார்த்தார். சின்ன வயதில் தெரியும் இளமன்னர் போல் இருக்கிறார் இப்போது. கிளிக்கு முத்தம் தந்தார். ஐயோ அது பொல்லாதது. தொல்லை உண்டாக்கிற்றோ அவர்க்கு?

செங்கான் : இல்லை. எனவே நீங்கள் இருவரும் இன்று தற்செயலாகச் சந்தித்தீர்கள்.

பொற்கிளை : ஆம்!

செங்கான் : பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பது போலவே நீங்கள் இருவரும் பேசவில்லை போலிருக்கிறது. அல்லது பேசிக் கொண்டீர்களா? பேசியிருந்தால் அதை என்னிடம் மறைப்பது இயற்கை தானே?

பொற்கிளை : அவர் பேசவில்லை.

செங்கான் : நீங்கள் பேசாததால்!

பொற்கிளை : நாணத்தால் தயக்கம்.

செங்கான் : அவருக்கோ மயக்கம்! இருக்கட்டும் அவருக்கு ஏதாவது சேதியுண்டா?

பொற்கிளை : நான் அவரைக் கண்டபோது பேசாதிருந்து விட்டேன். அதுபற்றி மன்னிப்புக் கேட்டதாகக் கூறுங்கள்.

செங்கான் : ஐயோ அது முறையல்லவே! மன்னிப்பு என்பது நேரில் கேட்க வேண்டியதல்லவோ?

பொற்கிளை : என் ஆசை மறைக்க முடியாதது. நான் நேரில் பேச ஒப்புகிறேன் காரியக்காரரே.

செங்கான் : மதிற்சுவர்மேல் நிலாக் கிளம்பட்டும். அவரை, நான் அங்க நிற்கச் சொல்லுகிறேன்.

பொற்கிளை : அவரிடத்தில் நான் என்ன சொல்லவேண்டும்?

செங்கான் : இன்னதென்று உங்கள் நெஞ்சம் உங்களைத் தூண்டும்.

பொற்கிளை : அவரை நான் அப்போதெல்லாம் பெயர் சொல்லி அழைப்பது வழக்கந்தான்.

செங்கான் : அது ஒழுக்கந்தான்.

பொற்கிளை : ஆனால் அப்போது எனக்கு நண்பர் முறை.

செங்கான் : இப்போது? திறந்து சொல்லுங்கள்.

பொற்கிளை : மின்சாரம் தொட்டால் உடலில் பாயும். விழி ஒன்றுபட்டால் உயிரில் பாயும், பழிகாரர் இவரைப்போல் நான் பார்த்ததேயில்லை. நான் அவரைக் கண்டபோதே அவர் என் சொத்தானார்.

செங்கான் : எனவே, என் முத்தான அத்தானே என்று அழைக்க வேண்டியதுதான்.

பொற்கிளை : சரி, ஆகட்டும்.

செங்கான் : இங்கேயே நில்லுங்கள். நான் அவரைக் கூட்டிவந்து மதிலின் புறத்தே நிறுத்திக் - கனைக்கிறேன். நீங்கள் தலையை நீட்டுங்கள்.

பொற்கிளை : சரி.

(போதல்)

## காட்சி - 4

சீனியப்பர் (சொக்கன் தந்தை) மாட்டுத் தொழுவத்தண்டை நிற்கும் மகனை நோக்கி விரைவாகத்,

"தம்பீ!"

சொக்கு : ஏனப்பா?

(ஓடுகிறான்)

சீனி : அட்டூர் அப்பாத்துரை வந்து பேசியிருந்தார். வழக்கு விஷயமாக! இப்போதுதான் போகிறார். இன்னும் புகை வண்டி நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கமாட்டார். அவர் கையோடு கொண்டுபோக வேண்டிய பத்திரங்களை வைத்துவிட்டுப் போய்விட்டார். என்ன செய்யலாம்?

(இதற்குள் செங்கானும் சொக்கனெதிரில் நின்று கையாலும், கண்ணாலும் சேதியைத் தெரிவிக்கிறான். சொக்கனுக்கு அது நன்றாய்ப் புரியவில்லை)

சொக்கு : நான்...

(இது தந்தையை நோக்கிக் கூறத் துவங்கிய மொழி)

செங்கான் : அட...

சொக்கு : போகிறேன்.

(என்று பேச்சை முடித்துவிடுகிறான். தந்தை பத்திரங் களைச் சொக்கனிடம் கொடுத்துவிடுகிறார். சொக்கன் வெளியிற் சென்றுவிடுகிறான். செங்கான் வழிமறித்து...)

செங்கான் : இதைக் கேள்!

சொக்கு : இப்போது நேரமில்லையே!

செங்கான் : இப்போது உன்னைப் பாராவிட்டால் உயிர்போய் விடும் அவளுக்கு! நான் கனைக்க வேண்டியதுதான், மதில் மீது வட்டநிலா!

சொக்கு : கனைக்காதே!

(என்று கூறிச் செங்கானின் வாயைப் பொத்துகிறான். செங்கான் கனைத்து விடுகிறான்).

("அத்தான்" என்ற அன்பு மொழி கேட்கிறது சொக்கன் காதில். அவன் பார்க்கிறான். முத்துச் சுடர்போன்ற சிரிப்புடன் மொய் குழல் முகம்! இதற்குள் அட்டூர் அப்பாத்துரை குடையையும் வைத்துப் போய்விட்டார் என்று கையில் தூக்கிக் கொண்டு மகளைத் தொடர்ந்து வந்த சீனியப்பர், மகன் - அவள் இருவரும் பார்வைச் சரட்டில் செங்கானால் கோக்கப்பட்டிருப்பதை நேரில் காணுகிறார். தந்தை கண்டுவிட்டதை அவள், அவன், செங்கான் ஆகிய மூவரும் காணுகிறார்கள். திகைத்துச் செயலிழந்து நின்ற மறுநொடியில் மங்கை மறைகிறாள்)

சொக்கு : ஏனப்பா?

சீனி : குடையையும் வைத்துப் போய்விட்டார்.

(சொக்கன் வாங்கிக் கொள்கிறான். தந்தை வீட்டுக்குள் போகிறார். செங்கானும், சொக்கனும் விரைந்து செல்லுகிறார்கள். பேசிக் கொண்டே).

செங்கான் : நீங்கள் போவதாக ஒத்துக் கொண்டிருக்கக் கூடாது.

சொக்கு : தந்தை தவித்தால் என் சதை ஆடாது - அப்படித் தானே?

செங்கான் : மற்றவர்கள் போகிறார்கள் என்றேன்.

சொக்கு : நான்தான் எதிரில் நின்றேன். நேரில் கண்டு விட்டாரே அப்பா! என்ன செய்வது?

செங்கான் : என்னைத்தான் கேட்பார். நான் ஏதாகிலும் சாக்குப் போக்குச் சொல்லிவிடுகிறேன்.

சொக்கு : இனியும் மறைத்துப் பேசுவது பிழைமேற் பிழை. என் எண்ணத்தைக் கூறிவிடு அவர் கேட்டால்! நீ போ. நான் இதோ வருகிறேன்.

செங்கான் : நான் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வந்து விடுகின்றேனே.

சொக்கு : அப்பா முகத்தில் விழிக்க வெட்கமாக இருக்கிறது. நானே போகிறேன்.

## காட்சி - 5

சீனியப்பரின் வீட்டில், சீனியப்பர் செங்கானை நோக்கி; வயது வந்த பெண்ணோடு வார்த்தை என்ன? அந்தப் பெண்ணின் பெற்றோர் கள் கண்டால் என்ன ஆகும்.

செங்கான் : இருவரும் சிறுவயதுமுதல் அறிமுகம் உடையவர்கள்.

சீனி : அந்த அறிமுகத்தின் இன்றைய நிலை?

செங்கான் : காதல் என்றுதான் நினைக்கிறேன். சின்ன ஐயா அந்தப் பெண்ணைத்தான் மணக்க இருக்கிறார்.

சீனி : அங்கே யார் வருவது பார்.

செங்கான் : சின்ன ஐயாவின் நண்பர்கள், நாலுபேர்.

சீனி : வாருங்கள், உட்காருங்கள். தம்பி அட்டூர் வரைக்கும் போயிருக்கிறான். இதோ வந்துவிடுவான். செங்கான் நீ போய் வேலையைப் பார்.

(போகிறான்)

சீனி : உங்களிடம் ஒரு செய்தி! சொக்கு எதிர்விட்டுப் பெண் பொற்கிளை மேல் கண்ணாக இருக்கிறான். எனக்குப் பிடிக்கவில்லை. முதற்காரணம் எதிர்த்த வீடு. இரண்டாவது காரணம் அவர்கள் வழிவேறு. எங்கள் கொள்வன கொடுப்பன வேறு. மூன்றாவது, அந்தப் பெண் அவ்வள வாகப் படித்தவளல்ல. நான்காவது அந்தக் குடும்பம் எப்போதும் நம்மை மதிப்பதில்லை. ஐந்தாவது, அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். நாம் மட்டும் ஒத்துக் கொள்ளவா போகிறோம்? தம்பிக்கு நீங்கள் சொல்லுங் கள். தங்கமான வேறு பெண். அங்கே இருக்கிறாள் - மங்கப்பாடியில், நல்ல இடம். சுமார் நூறு காணி நன்செய். பதினாயிரம் ரொக்கம் உண்டு. நமக்கு அதல்லவா தோது.

சோலை : பெண்ணும், பிள்ளையாண்டானும் மனம் ஒத்துப்போன தாகத் தெரிகிறதா?

சீனி : அப்படித்தான் தெரிகிறது.

சோலை : ஐந்து காரணம் கூறினீர்கள். பயனில்லை. அவன் விருப்பத்தை நிறைவேற்றுங்கள். இல்லாவிட்டால் குடும்பத் தொல்லையைத் கூவியழையுங்கள். காதல் இருவர் கருத்தொன்றி ஆதரவு பட்டதே இன்பம்.

சீனி : என் எண்ணத்தை (என்) பொன்னொத்த பிள்ளை மதிக்க வேண்டாமா?

பழமலை : இரு சோலை! அவர்கள் கூறுவதைக் கேட்டு அதன்படி சொக்கு நடக்கவேண்டும். அதுதான் முறை.

சீனி : வேறுபெண் இருப்பதாகக் கூறினேனே. அப்பெண்ணை மணப்பதால் மிக்க நலமுண்டு. பெற்றவர்க்கு ஒரு பெண் அவள். பிறகு சொத்தெல்லாம் சொக்கனுக்கே.

பூங்கா : மிக்க நலமாயிற்றே.

வேல் : அப்படித்தான் செய்யவேண்டும். நாங்கள் சொக்கனுக்குச் சொல்லுகிறோம். உங்கட்குக் கவலை வேண்டாம்.

சோலை : உறுதி பெற்ற நெஞ்சம் மற்றொரு பெண்ணிடம் திரும்புமா?

வேல் : உம். ஒட்டுப்புல்! ஒருத்தியிடம் ஓடிற்று உள்ளம் மற்றொருத் தியைக் காணாததால்! இன்னோரழகியைக் கண்டால் அவளி டம் ஒட்டிக் கொள்ளும் அந்த உள்ளம். காதல் என்பது அவ்வளவு தான். சொக்கு நல்லவன். சொன்னால் கேட்பான். மக்கு அல்ல.

சோலை : சரி நாம் வெளியிற் சென்று உலாவலாமே! எதிரில் சொக்கு வரக்கூடும்.

பழமலை : ஆம். போவோம். நீங்கள் இருங்கள்! நாங்கள் சொல்லித் திருத்துகின்றோம்.

(போதல்)

## காட்சி - 6

நண்பர் நால்வர் மந்தைவெளியில் உலாவுகையில் எதிரில் சொக்கன் வருவதைக் காணுகிறார்கள்.

வேல் : நான் பேசுகிறேன் அவனிடத்தில்

சொக்கு : மன்னிக்கவேண்டும் என்னை. அப்பா சொல்லைத் தட்ட முடியாமல் அவசரமாகப் போய்வர வேண்டியதாயிற்று.

வேல் : தந்தை சொல்லை மைந்தன் தட்டி நடப்பது முறையல்ல அல்லவா?

சொக்கு : அதை இன்னொருமுறை நான் சொல்லவா?

வேல் : நீ எதிர்வீட்டுப் பெண்ணை மணக்க இருப்பதை உன் தந்தை விரும்பவில்லை. மங்கப்பாடிப் பெண்ணை நீ மணக்க வேண்டும் என்கிறார். என்ன சொல்லுகிறாய்?

சொக்கு : அவர் சொன்னாரா?

வேல் : சொன்னார்.

சோலை : பல காரணங்களோடு.

பழமலை : எதிர்விட்டுப் பெண்மேல் உள்ள உன் காதலை மாற்றிக் கொள்.

சோலை : எதிர்வீடு என்பதற்காகவே! அல்லாமலும் கேள். அவர்கள் வழிவேறு! உங்கள் வழிவேறு! இரண்டு வழிக்கும் அரை மைல், முக்கால் மைல் சுற்றாக இருக்கலாம் அல்லவா.

வேல் : கிண்டலுக்கு வழியில்லை, இதில் சும்மா இரு.

சோலை : அதற்கு நான் சொல்லவில்லை சொக்கு. தக்க காரணம் ஐந்து சொன்னார் அப்பா. எதிர்வீட்டுப் பெண்ணை நீ மறந்துவிட வேண்டும் என்பதற்கு. அவற்றில் இரண்டு காரணத்தைச் சொன்னேன். தப்பா?

வேல் : இரு அப்பா. நான் பேசுகிறேன். மேலும் சொக்கு அந்தப் பெண் அவ்வளவாகப் படித்திருக்கவில்லை.

சோலை : எவ்வளவாகப் படித்திருக்கவில்லை? அதைப் பற்றிக் கூறவில்லை தந்தையார்.

வேல் : அதுவுமில்லாமல், உங்களை அவர்கள் மதிப்பதே யில்லை.

சோலை : நீ மணந்து கொண்டால் இவர்கள் உங்களைச் சிலசமயம் மதிக்க ஆரம்பித்துவிட்டால்? மிக்க கெடுதி யில்லையா?

வேல் : இன்னொன்று கேள். அந்தப் பெண்ணை அவர்கள் உனக்குக் கொடுக்க மாட்டார்கள்.

சோலை : கேட்டுப் பார்ப்பதற்குள் உங்கள் தகப்பனார் தெரிந்து கொண்ட உண்மை இது!

(சொக்கு, சோர்ந்து உட்காருகிறான் ஓர் ஆலின்கீழ். மற்றவரும் உட்காருகிறார்கள் வேரின் மேல்)

சொக்கன் சொல்லுகிறான்: நான் நேற்றுத்தான் ஓர் இன்ப உலகைக் கண்டேன். அவ்வுலகில் நானும், பொற்கிளையும் குடியேறி னோம். மயிலிறகின் அடி போலப் பயிலும் அவள் சிரிப்பின் ஒளியில் நான் ஈடுபட்டுக் கிடந்தேன். எங்கள் அன்பு இணையற்ற தாயிற்று. அறம்பல புரிந்தோம். திறம்பட நடந்தோம். சிங்க மக்களைப் பெற்றோம். அவள் பிரிவை நான் பொறுப்பதேயில்லை. ஏனெனில் கன்று, தன் தாயை அன்புடன் பார்ப்பதுபோல் இரக்கத்தோடு பார்க்கும் அவள் பார்வையை நான் விலக்குவான் கண்ட இன்ப உலகு அழியாதது என்று நினைத்தேன். அது மறைந்தது. அதுமட்டுமா? நான் துன்ப உலகில் இழுத்துத் தள்ளப்பட்டேன். இப்போது?

புத்தன் சொன்னது சரி. உனக்கென ஒன்று தேடாமல் தனித்திரு! அதனால் துன்ப உலகில் உனக்கு இன்பம் கிடைக்கும் என்றான். அவன் தந்தை, தாய், மனைவி மக்கள் அனைவரையும் துறந்தான். இன்பம் கருதி!

நான் என் மனோ லோகத்தைவிட முடியாதா?

என் பொற்கிளையை நான் கைவிடுவதால் என் தந்தைக்கு மகிழ்ச்சி. அன்னைக்கு மகிழ்ச்சி!

நண்பர்கட்கு மகிழ்ச்சி! எத்தனை இன்பம் எனக்கு?

புத்தனைப் போலே பொற்கிளையையும் அன்னை, தந்தை, நண்பர்களையும் துறப்பதால் ஏன் நான் அளவற்ற இன்பத்தை அடையக் கூடாது?

பழமலை : சொக்கு, நாங்கள் நடுங்கத்தக்க வழியை நீ நோக்குகிறாய். நீ யாரையும் துறக்க வேண்டியதில்லை. தந்தை குறிக்கும் பெண்ணை மணந்தால்.

சொக்கு : ஒன்றில் உறுதி கொண்டேன் அன்றே அதற்கோர் இறுதி கண்டேன். காதல்! அப்போதே அதற்கோர் மோதல்! ஆம்! இவ்வையம் எதிலும் அப்படி!

பழமலை : நீ உன் தந்தை சொல்லும் பெண்ணை மணக்க வேண்டும்.

சொக்கு : வேண்டும், ஆம் திறக்காத மலர்வாய் திறந்து சிறக்க "அத்தான்" என்றழைத்த, அவள் இவ்வுலகில் பிறக்கவே யில்லை என்று நான் எண்ணவேண்டும். தன் காதல் கருத்துரைத்து என்னை வேண்டிக் கொண்ட அவள் மலர் போன்ற கண்ணை நான் புண்ணென்று எண்ண வேண்டும். முயற்சி செய்வேன் நண்பர்களே.

சோலை : அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம், எழுந்திருங்கள்.

வேல் : இதை உன் தகப்பனாரிடம் சொல்லிவிடுகிறோம்.

சோலை : அவர் மகிழ்ச்சி அடையட்டும், சில நாட்கள்.

(போதல்)

## காட்சி - 7

சொக்கு : நான் கூண்டறையில் காத்திருப்பேன். அவளிடம் என் உறுதியைக் கூறிவிட்டு, அவள் சொன்னதை என்னிடம் வந்து சொல்லு. அதன்பின் உன் அவசர வேலைக்குப்போ.

செங்கான் : "மணந்தால் உன்னை மணப்பது அல்லது மண மின்றி இருப்பது" என்றுதானே.

சொக்கு : பின் என்ன? ஓடு! (மற்றொருபுறம்)

வேல் : "உன் தந்தை மங்கப்பாடிப் பெண்ணை நீ மணக்க வேண்டும் என்று திண்ணமாகக் கருதுகிறார்" என்று கூறினோம். கொஞ்சம் கவலையடைந்தான். பிறகு ஒத்துக் கொண்டான்.

சீனி : வேறு மாற்றமில்லையே.

சோலை : மாற்றமாவது மண்ணாங்கட்டியாவது. நாங்கள் விடை பெற்றுக் கொள்ளுகிறோம்.

சீனி : இன்னும் இரண்டு வாரத்தில் அவனுக்கு மணத்தை முடித்துவிட நினைக்கிறேன்.

சோலை : ஏன் முடிக்க முடியாது? ராமன் பட்டாபிஷேகம் நாளைய சூரியோதத்திற்கு என்று நாள் குறிக்கிறார் திடீரென்று வசிஷ்டர்.

சீனி : அவனிடம் அதையும் சொல்லிவிட்டுப் போங்கள், போகும் போது! அவன் அதோ தெருப்பக்கத்துக் கூண்டறையில் தான் இருப்பான்.

வேல் : சரி போய் வருகிறோம்.

(போதல்)

(மற்றொருபுறம்)

கூண்டறையில் நண்பர் நால்வரும் சொக்கனைக் காணுகிறார்கள்.

வேல் : மற்றொரு புதுச்சேதி.

சோலை : உனக்கு நல்ல சேதி!

சொக்கு : என்ன ...

(சொக்கன் எழுந்து அவர்களுடன் போகிறான்)

வேல் : இன்னும் இரண்டு வாரத்தில் உன் வாழ்க்கையில் ஓர் புதுமை.

சொக்கு : இதென்ன சோதிடமா?

வேல் : இல்லை. உண்மைதான்.

சொக்கு : சோதிடம் உண்மையில்லை என்று யார் சொன்னது? புதுமை என்று சொன்னாயே.

சோலை : அதைச் சொல் நாயே என்று கேட்கிறார், நண்பர் சொக்கு.

(தெருவைத் தாண்டித் சென்றுவிடுகிறார்கள்)

(சீனியப்பர் தன்பிள்ளை சொக்கனின் கூண்டறைக்கு வருகிறார். சொக்கன் உள்ளிருப்பதாக எண்ணி, தம்பீ! (பதில் இல்லை) என்று அழைக்கிறார்.

அங்கிருந்த நாற்காலியில் உட்காருகிறார். நாழிகை ஆய் விட்டதென்று கருதிய செங்கான் பரபரப்புடன், தெருப் பக்கத்தில் இருந்தபடி, கூண்டறையில் சொக்கன் உட்கார்ந்திருப்பதாகக் கருதி சேதி சொல்லுகிறான்).

"நான் சொன்னேன். அவர் உன்னை மணந்தால் மணப்பாராம். அல்லது மணமின்றி இருப்பாராம் என்று! அதற்கு அந்தப் பொற்கிளை "நான் அவரை மணந்தால் மணப்பேன். வேறு ஒருவனை மணக்க என் பெற்றோர் வற்புறுத்தினால் உயிர் துறப்பேன்" என்று தம் காதல் மேல் ஆணையிட்டுச் சொன்னார்கள்.

நான் போய் வருகிறேன்".

(ஓடுகிறான்)

(இது கேட்ட சீனியப்பர் திகைத்து மேசைமேல் தலை சாய்த்துக் கிடக்கிறார்)

## காட்சி - 7

சொக்கு : நான் கூண்டறையில் காத்திருப்பேன். அவளிடம் என் உறுதியைக் கூறிவிட்டு, அவள் சொன்னதை என்னிடம் வந்து சொல்லு. அதன்பின் உன் அவசர வேலைக்குப்போ.

செங்கான் : "மணந்தால் உன்னை மணப்பது அல்லது மண மின்றி இருப்பது" என்றுதானே.

சொக்கு : பின் என்ன? ஓடு! (மற்றொருபுறம்)

வேல் : "உன் தந்தை மங்கப்பாடிப் பெண்ணை நீ மணக்க வேண்டும் என்று திண்ணமாகக் கருதுகிறார்" என்று கூறினோம். கொஞ்சம் கவலையடைந்தான். பிறகு ஒத்துக் கொண்டான்.

சீனி : வேறு மாற்றமில்லையே.

சோலை : மாற்றமாவது மண்ணாங்கட்டியாவது. நாங்கள் விடை பெற்றுக் கொள்ளுகிறோம்.

சீனி : இன்னும் இரண்டு வாரத்தில் அவனுக்கு மணத்தை முடித்துவிட நினைக்கிறேன்.

சோலை : ஏன் முடிக்க முடியாது? ராமன் பட்டாபிஷேகம் நாளைய சூரியோதத்திற்கு என்று நாள் குறிக்கிறார் திடீரென்று வசிஷ்டர்.

சீனி : அவனிடம் அதையும் சொல்லிவிட்டுப் போங்கள், போகும் போது! அவன் அதோ தெருப்பக்கத்துக் கூண்டறையில் தான் இருப்பான்.

வேல் : சரி போய் வருகிறோம்.

(போதல்)

(மற்றொருபுறம்)

கூண்டறையில் நண்பர் நால்வரும் சொக்கனைக் காணுகிறார்கள்.

வேல் : மற்றொரு புதுச்சேதி.

சோலை : உனக்கு நல்ல சேதி!

சொக்கு : என்ன ...

(சொக்கன் எழுந்து அவர்களுடன் போகிறான்)

வேல் : இன்னும் இரண்டு வாரத்தில் உன் வாழ்க்கையில் ஓர் புதுமை.

சொக்கு : இதென்ன சோதிடமா?

வேல் : இல்லை. உண்மைதான்.

சொக்கு : சோதிடம் உண்மையில்லை என்று யார் சொன்னது? புதுமை என்று சொன்னாயே.

சோலை : அதைச் சொல் நாயே என்று கேட்கிறார், நண்பர் சொக்கு.

(தெருவைத் தாண்டிச் சென்றுவிடுகிறார்கள்)

(சீனியப்பர் தன்பிள்ளை சொக்கனின் கூண்டறைக்கு வருகிறார். சொக்கன் உள்ளிருப்பதாக எண்ணி, தம்பீ! (பதில் இல்லை) என்று அழைக்கிறார்.

அங்கிருந்த நாற்காலியில் உட்காருகிறார். நாழிகை ஆய் விட்டதென்று கருதிய செங்கான் பரபரப்புடன், தெருப் பக்கத்தில் இருந்தபடி, கூண்டறையில் சொக்கன் உட்கார்ந்திருப்பதாகக் கருதி சேதி சொல்லுகிறான்).

"நான் சொன்னேன். அவர் உன்னை மணந்தால் மணப்பாராம், அல்லது மணமின்றி இருப்பாராம் என்று! அதற்கு அந்தப் பொற்கிளை "நான் அவரை மணந்தால் மணப்பேன். வேறு ஒருவனை மணக்க என் பெற்றோர் வற்புறுத்தினால் உயிர் துறப்பேன்" என்று தம் காதல் மேல் ஆணையிட்டுச் சொன்னார்கள்.

நான் போய் வருகிறேன்".

(ஓடுகிறான்)

(இது கேட்ட சீனியப்பர் திகைத்து மேசைமேல் தலை சாய்த்துக் கிடக்கிறார்)

## காட்சி - 8

செங்கான் சொக்கனைக் காணுகிறான், வழியில்.

செங்கான் : அந்தக் கூனன் புகைவண்டி நிலையத்துக்குப் போய் விடுவான். அதற்குள் இந்த இருபத்தைந்து ரூபாயையும் அவனிடம் ஓடிக் கொடுத்துவிட்டு வா என்றார் அப்பா! அதனால் தான், பொற்கிளை சொன்னதை உங்களிடம் அவசரமாகக் கூறிவிட்டு ஓடினேன். ரூபாயைக் கொடுத்து விட்டேன். கூனனிடம்.

சொக்கு : பொற்கிளை கூறியதை என்னிடம் எப்போது கூறினாய்?

செங்கான் : கூண்டறையில் யார் இருந்தது! நீங்களல்லவா?

சொக்கு : சரி அப்பாதான். என்ன கூறினாய்?

செங்கான் : "மணந்தால் உன்னை மணப்பேன் அல்லது மணமில்லாது கிடப்பேன் என்று சொன்னார் என்றேன். அதற்குப் பொற் கிளை மணந்தால் அவரை மணப்பேன் அல்லது மண மின்றியிருப்பேன். பெற்றோர் வற்புறுத்தினால் இறப்பேன் என்று கூறினார்கள்" என்று கூறினேன்.

சொக்கு : வேறு வேண்டியதேயில்லை.

செங்கான் : கூண்டறையில் இருந்தவர் அப்பாவா?

சொக்கு : எனக்கு இம்மிகூட ஐயமில்லை. நீ வேண்டுமானால் இன்னொரு முறை கூண்டறையில் இருப்பவர் அப்பா தானா என்று பார்த்து விட்டு, மாட்டுத் தொழுவத்தில் என் கைப்பெட்டி வைத்திருக் கிறேன். அதை எடுத்துக் கொண்டு வந்துவிடு.

(போதல்)

## காட்சி - 9

தெருவின் கடைசியில் நிற்கிறான் சொக்கன். குட்டியப்பர் வருகிறார்.

குட்டியப்பன் : சொக்கு ஏன் நிற்கிறாய்! உழவைப் பற்றிய உன் கொள்கைகளை நான் கேள்விப்பட்டேன். மிக்க சிறந்ததப்பா!

ஏனெனில், உழவனுக்குக் கல்வி தேவை என்கிறாய். பயிரிடுவோனுக்குக் கல்வி தேவை என்கிறாய். நல்ல வசதி தேவை என்கிறாய். படித்தவர்கள் உழவுத் தொழிலில் நடத்த முன்வராவிடில் உழவுத் தொழில் மதிப்பிழந்து போவது உண்மை. இப்போது அப்படித் தானே இருக்கிறது? இன்னும் அதுபற்றித் தெரிந்து கொள்ள நினைக்கிறேன். வேலை ஒழியவில்லை.

சொக்கு : உழவுத் தொழில் மேலானது. அதைவிட மேலானது இன்னொன்று இருக்கிறது. எதையும்விட்டுச் சும்மா இருப்ப தென்று இருக்கிறது. புத்தன் இதைத்தான் கூறினான், உலகத்துக்கு!

குட்டி : ஐயோ! இந்த உலகம் இந்நாளில் புத்தர் கூட்டத்தை விரும்பவில்லையே. சொக்கர்களையல்லவா அது எதிர்பார்த்துத் தவங்கிடக்கிறது.

(செங்கான் கைப்பெட்டியோடு வருகிறான்)

சொக்கு : நான் போய் வருகிறேன். வா செங்கான்!

(செங்கானும், சொக்கனும் குட்டியப்பரை விட்டுச் சிறிது தூரம் சென்று விட்டார்கள்)

சொக்கு : என்ன சேதி?

செங்கான் : நான் சொன்னதை உன் தகப்பனார் (உன்) தாயாரிடம் சொல்லிக் கொண்டிருந்தார் வருத்தத்துடன்.

சொக்கு : சரி தீர்ந்தது.

செங்கான் : மேலே நடக்க வேண்டியது என்ன?

சொக்கு : தொட்டதெற்கெல்லாம் கெட்டதே விளையும் இவ்வுலகப் பற்றை விட்டிருப்பது தவிர வேறொன்றும் காணேன்.

செங்கான் : துறவா?

சொக்கு : வேறு? இவ்வுலகில் உறவா?சீ!

செங்கான் : மற்றோர் துணையின்றி இருக்கும் பெற்றோர்களைத் துறப்பதா! உங்களின் தோளுழைப்பால் நாளும் தங்கம் நல்கக் காத்திருக்கும் நன்செய், புன்செய்களைத் துறப்பதா? வீடுவாசல், தோட்டம், துறவு, மாடு, கன்றுகளைத் துறப்பதா? ஐயா என்னையுமா துறக்கின்றீர்!

சொக்கு : எனக்கு விடை கொடு!

செங்கான் : என்னையும் துறக்கின்றீரா? எல்லாப்பறையும் ஒழித்தீரா? அந்த நல்லாளையுமா? தேன் போன்ற சொல்லாளையுமா? முல்லைக் காட்டை மூசு வண்டு மறந்ததென்றால், சொல்வார் சொல்லினும், கேட்பார் மதி கெட்டாரோ?

சொக்கு : ஆம்! ஒரு பற்று மட்டும் என் உள்ளத்தை விட்டு நீங்க வில்லை. செங்கான், நீ அவளுக்கு ஆதரவாக இரு! அவளால் முடிந்தால், அவள் என்மேல் வைத்த அன்பைத் துறக்கும்படி கூறு. என்னைத் தனியே விடு.

(சொக்கு கைப்பெட்டியோடு விரைந்து செல்லுகிறான். செங்கான் முகத்தில் அறைந்து கொண்டு நின்று, சொக்கன் செல்லும் திசை நோக்கிப் பார்த்திருக்கிறான்)

## காட்சி - 10

நல்லான்குப்பத்தின் நடுவீதியில் சொக்கன் கைப் பெட்டியோடு போகிறான். கட்டியப்பர் தம் வீட்டின் திண்ணையில் உட்கார்ந்திருக் கிறார். சொக்கனைப் பார்த்து விடுகிறார்.

கட்டி : வரவேண்டும், வரவேண்டும் வண்டி எங்கே? களைப் புடன் கால்நடையாகவா? எதற்காக? வந்து உட்காருங்கள். பயிர்த் தொழிலாளிகளுக்குக் குறைந்த விழுக்காடு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று கூறுகிறீர்களாமே.

சொக்கு : அவனால் நாள் ஒன்றுக்கு ஒன்றேகால் ரூபாயாவது நிலத்துக்கு உடையவருக்குப் பயன் உண்டாகும்போது தான், ஒரு ரூபாய் கொடுக்கும்படி கூறினேன். ஒருவனால் ஒன்றேகால் ரூபாய் நமக்கு வருமானம் ஏற்படும்படி நாம் சாகுபடியைத் திருத்தமான முறைக்குக் கொண்டுவர நமக்குப் படிப்பு வேண்டும். எனக்கு நேரமில்லை. வரும்போது வருகிறேன்.

கட்டி : சரி, நடந்தா போகிறீர்கள்?

(பதில் சொல்லாமலே சொக்கன் விரைவாகச் சென்று மறைகிறான்.

சிறிது தூரம் சென்றபின், எதிரில் இரட்டை மாட்டு வண்டியில் வந்து கொண்டிருக்கும் மூக்கறையன் முனியன், சொக்கனை நோக்கி, எங்கே? வண்டி, கிண்டி இல்லாமலா என்ற கருத்தில் "ஹெங் வங் ஹிங்" என்று கூச்சலிடுகிறான்.)

சொக்கு : கொஞ்சம் அவசரம்!

(என்று விரைவில் நடந்து மறைந்த சொக்கன், அங்கொரு புறமிருந்த மாமரத்தின் நிழலில் தங்கிப் பெட்டியைத் திறந்து ஒரு பொய்த் தாடியையும், பொய் மீசையையும் முகத்தில் அணிந்து, ஓர் ஆண்டிபோல் காவியுடைகள் பூண்டு, தலைத்துண்டும் கட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.)

## காட்சி - 11

பொற்கிளை தன் கொல்லை மதிற்சுவர் மேல் தலையை நீட்டுவதும், உள்ளே வாங்குவதுமாய் இருக்கையில், செங்கான் வீதியில் அவளை நோக்கி வருகிறான்.

செங்கான் : அம்மா நீங்களும், அவரும் கண்ணொடுகண் நோக்கி இருந்த நிலையை அவர் தந்தைக் கண்டாரல்லவா? அதன் பிறகு அவர் நண்பர்களை விட்டுச் சொக்கருக்குப் புத்திமதி சொல்லச் சொன்னார். அப்படியே நண்பர்கள், சொக்கரிடம் "பொற் கிளையை மணக்க வேண்டாம், தந்தை கூறும் பெண்ணைத்தான் மணக்க வேண்டும்" என்று கூறினார்கள். அதன் மேல் சொக்கர் துறவுள்ளத் தோடு ஊரைவிட்டுச் சென்றுவிட்டார். நான் இதை, அவர் தந்தையிடம் கூறினேன். அவர் துடிதுடித்து, என்னையும் இன்னும் பலரையும் அனுப்பிப் பல பக்கங்களிலும் தேடச் சொன்னார். தேடினோம். கால்கள் கோயில் யானை போல் வீங்கியது தவிர அவர் என்னமோ அகப்படவேயில்லை.

அவர் போகும்போது கடைசியாக ஒர சேதி சொல்லிப் போனார். "எதிலும் பற்று நீக்கினேன். ஆனால் என் பொற்கிளை மேல் வைத்த அன்பை மட்டும் மாற்ற முடிய வில்லை. நீ அவளுக்கு ஆதரவாக இரு" என்று கூறிக் கட்டளை இட்டுத் தெருவை விட்டு மறைந்தார்.

பொற்கிளை: சென்றவர் வராமலா இருந்துவிடுவார். என் அன்பு அவர் மனதில் இருக்குமானால் அந்த மனம் அவரை அங்கேயே நிறுத்தி வைத்திருக்குமாயென்ன? நீயா எனக்கு ஆதரவு? அதெப்படி? நீ எனக்குப் பிட்டும், முறுக்கும் வாங்கிக் கொடுப்பதா? இரண்டு, மூன்று நாளில் நான் அவரைக் காணவேண்டும் அல்லது என் உயிர் இவ்வுலகை விட்டு நீங்க வேண்டும். காரியக் காரரே, என் தந்தைக்கும் உடல் நலமில்லை. நானோ

அவருக்கு ஒரே பெண். சொக்கருக்கும், எனக்கும் விரைவில் திருமணம் செய்து கண்ணால் காண வேண்டும் என்பது அவர் அவா. இச்செய்தியைக் கேள்விப்பட்டால் அவர் சாவது உறுதி. என் தந்தையோ என்னைச் சொக்கருக்கு மணம் செய்து கொடுக்க வேண்டியிருக்கும் என்று, என்னை நன்றாகப் படிக்க வைத்தார். அதுவுமில்லாமல், சொக்கரின் தந்தையிடம் அதிக மரியாதை காட்டி வந்தார். எங்கள் குடும்பமும் அவர் குடும்பமும் ஒரே வழியுடையது.

செங்கான் : சரியாய்ப் போயிற்று! உங்களைச் சொக்கர் மணக்க லாகாது என்பதற்கு ஐந்து காரணங்கள் கூறினார் அவர் தந்தை அந்த ஐந்தில் நான்கு காரணங்கள் பொய் என்று இப்போது தெரிகிறது. மற்றொரு காரணம் நீங்கள் பணக்காரர் இல்லை என்பது. மங்கப் பாடியில் இருக்கும் பெண் வீட்டார் பணக்காரர். அவர்கட்கு ஒரே பெண். பெற்றவர்கட்குப்பின், சொத்து சொக்கருக்கே சேரும் என்றும் கூறினார்.

பொற்கிளை : மங்கப்பாடியார் எங்களைவிடப் பணக்காரர். ஐயமில்லை.

செங்கான் : சொக்கருக்கு இதெல்லாம் தெரியாதா?

பொற்கிளை: நன்றாய்த் தெரியும். அவர் நண்பர்களிடம் அவர் ஏன் இதையெல்லாம் மறுக்கவில்லையென்றால், "தம் தந்தை" சொத்து ஒன்றையே பெரிதாகக் கருதுவதை வெளிக்காட்டிக் கொள்ள அவருக்கு விருப்பமில்லை. தந்தை, சொத்தையே பெரிதென்றும் பிள்ளையின் விருப்பம் சிறிதென்றும் கருதியதைப் பொறுக்க முடியாமல்தான் அவர் துறவு பூணவும் துணிந்தார். துறவு என்றால் என்ன காரியக் காரியக்காரரே? அது இன்ன தென்று எனக்கு விளக்கிக் கூற முடியுமா?

செங்கான் : துறவு என்றால், உங்களைத் தவிர, மற்றவர்களையும், மற்ற செய்திகளையும் நினைக்காமல் ஒரு புறமாக இருந்து விடுவது.

பொற்கிளை: அப்படியானால் என்னைவிடப் பெரும் பேறு பெற்றவர்கள் எவர்?

செங்கான் : ஏன்?

பொற்கிளை: வேறென்ன, எதையும் நினைக்காமல் ஒருபுறமாக என்னுடன் வாழ்வதென்றால் எங்கள் இருவர் உள்ளமும் ஒட்டிய அணுவுக்கணு விட்டிட வழியிராதன்றோ? மேலும் அவர் தந்தையைக் கண்டால் நான் கூறியதாகக் கூறுங்கள்.

செங்கான் : என்னவென்று?

பொற்கிளை: அவர் இழந்த மகன் மீண்டும் வருவாராயின் அது என்னால்தான் என்று. அவர் என்னை மருமகளாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் அவரை மாமனாராக ஒத்துக் கொண்டதால்தான் அவர் தன் அருமை மகனை அவர் அடைய முடிகிறது! இல்லையா?

செங்கான் : அது மட்டும் உண்மைதான்.

பொற்கிளை: நாளைக்கு அவர் வருவார். ஆயினும் "நாளைக்கு" வரைக்கும் என் உடல், உயிரைத் தாங்கி வாழுமா? காரியக் காரரே, அவர் வந்ததும் நேரே என்னை வந்து அழையும். எனக்கு விடைகொடும்.

(போதல்)

செங்கான் : பொற்கிளைக்கு என்ன நம்பிக்கை! அவள் நம் பிக்கை பொய்யாகுமானால்?

## காட்சி - 12

சீனியப்பர், செங்கான் இருவரும் பேசியிருக்கிறார்கள்.

சீனி : செங்கான், பலப்பல ஊர்களில் தேடியாயிற்று, பிள்ளையைக் காணோம். தாயோ ஊண் உறக்கம் இல்லாமல் உயிர் துடிக்கிறாள். வற்புறுத்திக் கூறுவானாயின் நான் மறுத்திருக்க மாட்டேன். எங்கு இன்னல் அடைகின்றானோ? என்னை எவ்வாறு தூற்றுகின்றானோ!

செங்கான் : நீங்கள் ஐந்து காரணங்கள் கூறினீர்கள், பொற்கிளையை அவர் மணக்கக் கூடாது என்பதற்கு முதற் காரணம், எதிர்த்துவிடு.

சீனி : எதிர்த்த வீடாயிருந்தால் கெடுதலில்லையே!

செங்கான் : இப்போது சொல்லுகிறீர்கள். இரண்டாவது காரணம் "அவர்கள் வழி வேறு எங்கள் வழிவேறு" - இதுவும் சரியில்லை என்று கேள்விப்படுகிறேன்.

சீனி : யார் சொன்னது?

செங்கான் : பொற்கிளை

சீனி : ஒரே வழிதான். ஆனால் பலநாட்களாகத் தொடர்பில்லாமல் இருக்கிறது. அதைத்தானே சொன்னேன்.

செங்கான் : இப்போது இப்படிச் சொல்லுகிறீர்கள். மூன்றாவது காரணம்: அந்தப் பெண் படித்தவள் அல்ல, என்பது. பொற்கிளை படித்தவள். உலகமறிந்த விஷயம் மங்கப்பாடிப் பெண்ணுக்கு எழுத்தே தெரியாது.

சீனி : மிகவும் படித்தவள் என்று கேள்விப்பட்டேனே!

செங்கான் : இப்போது கேள்விப்பட்டால் பயனில்லையே. நான்காவது காரணம்: அந்தக் குடும்பம் எப்போதும் நம்மை மதிப்பதில்லை. அவர்கள் எப்போதும் உங்கட்கு மரியாதை செலுத்தத் தவறியதே இல்லை. நானா சொல்லுகிறேன்.

பொற்கிளை சொன்னார்கள். நீங்கள் கூறிய ஐந்தாவது காரணம் மட்டும் உண்மை! மங்கப் பாடிப் பெண்வீட்டுக் காரர் பொற்கிளை வீட்டாரைவிடப் பணக்காரர். ஆனால், பொற்கிளை வீட்டார் ஏழைகளல்லர்.

சீனி : அப்படியானால் பணத்தைப் பெரிதென்று நினைத்தேன் என்கிறாயா!

செங்கான் : அப்படி நான் நினைக்கவில்லை. ஊரான் வீட்டுச் சொத்து நமக்கு வந்துவிட வேண்டும். அதற்காகப் பிள்ளை உங்கள் சொற்படி மணம் புரிந்து கொண்டு வாழ்க்கையை மண்ணாக்கிக் கொண்டாலும் உங்கட்குக் கவலையில்லை.

சீனி : என்ன செங்கான்? நீதான் பேசுகிறாயா?

செங்கான் : உங்கள் பணப் பேராசையைக் காலமெல்லாம் அறிந்த நான்தான் பேசுகிறேன். பணத்துக்காகப் பிள்ளையைக் கொன்ற கதை இவ்வுலகுக்குப் புதிது அல்லவா? நான் அயலான். கூலிக் காரன் அவரைப் பிரிந்து வாழ எனக்குப் பிடிக்கவில்லையே.

சீனி : கொன்றேனா? பிள்ளை உயிரோடில்லையா?

செங்கான் : சே, சே, உயிரைப் பெட்டியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார் கண்ணான தகப்பனாரைக் காண.

சீனி : செங்கான் நீ கேள்விப்பட்டாயா? சொல்ல மாட்டாயா? இறந்தா போய்விட்டான்?

செங்கான் : எங்கும் நான் கேள்விடப்படவில்லை, இறந்ததாக! தகப்பனார் என்றால் பொற்கிளையின் தகப்பனாருக்குத் தான் பொருந்தும். பொற்கிளை அவருக்கு ஒரே பெண்! நீங்கள் அதையும் முன்பு மறைத்துப் பேசினீர்கள். பொற் கிளை, தன் காதலனைப் பிரிந்து வருந்துவது கண்டு அதுவே நினைவாகி நோயால் வருந்துகிறார். அன்னை யோ, பொற்கிளைக்கு முடிசூட்டி "அம்மா உன் எண்ணப்படி ஒருவனை மணந்து கொள். இன்பமாய் இரு. உன் இன்பம், என் இன்பம்" என்று கூறிவருகிறார்கள்.

சீனி : அப்படியானால் நானும் சாக வேண்டுமோ?

செங்கான் : யார் சொன்னாது? தகப்பன் என்றால் அப்படி யிருக்க வேண்டும் –கால் உயிரோடு –என்கிறேன்.

- (இதற்குள் ஓர் ஆள் ஓடிவந்து பொற்கிளையின் தந்தை இறந்தார் என்ற சேதியைக் கூறுகிறான்)

சீனி : என் உயிரும் நில்லாது.

செங்கான் : ஆம். ஆனால் அவர்கள் வழிவேறு, தங்கள் வழி வேறு. பணம்! அதனால் எத்தனை, பிணம் காணப்போகிறோமோ! இன்னும் சிலமணி நேரமும் ஆக வில்லை, பொற்கிளை யோடு பேசியிருந்தேன்! உயிர்போகும் நிலையில் இருந்த தன் தந்தையைப் பற்றிய கவலையையும் அவளிடம் நான் காண வில்லை. ஆனால் பிரிந்து சென்ற பெருமானுக் காகவே கதறினாள் அந்தக் கட்டழகி! நான் இங்கிருக்க முடியாதே! ஐயா நான் சாவு வீட்டுக்குப் போகவேண்டும்.

சீனி : ஏனப்பா இவ்வீடு பிடிக்கவில்லையா? வேலை பார்க்க விருப்பமில்லையா, அதையாவது சொல்லிவிடு.

செங்கான் : ஆ! அப்படியா? சரி! ஐயா உண்மையில், உங்கள் வீட்டை விட எனக்குச் சாவு வீடுதான் மேல் என்று தோன்று கிறது. வேலை வேண்டாம். (போதல்)

சீனி : உலகில் ஏசலுக்கு ஆளாகினேன். மெய்யாகவே நான் பணத்தாசையால் மகளின் நல்ல மனத்தை மறுத்தேன்!

(தலை சாய்ந்து வருந்துகிறான்)

## காட்சி - 13

காக்கைப்பாடி என்னும் ஊர். இரிசன் புத்தகமும் கையுமாக வீதியிற் செல்லுகிறான் சொக்கன் கண்டு,

"தாங்கள் இந்த ஊர்தானே"

இரிசன் : ஆம்! ஏன்?

சொக்கன் : நான் ஓர் துறவி. அயலூரன். இவ்வூரில் படித்தவர்களைக் கண்டு அவர்களின் வாய்ச்சொல்லால் நலம் அடைய விரும்பு கிறேன். புலவர்களின் சொற்பொழிவுகளில் ஏதாவது கேட்க விருப்பம்!

இரிசன் : இவ்வூரில் ஆசிரமம் ஒன்று இருக்கிறது. அந்த ஆசிரமத்தில் ஒருபக்கம் யோகி சரஸ்வதிஸ்வாமி சுந்தராநந்த பாரதியார் என்றொருவர் இருக்கிறார் அவர் பேசுவதே கிடையாது. உங்கள் போன்றோரின் ஐயப்பாடுகளைத் தெரிவித்தால் எழுதிக் காட்டுவார். அவரை நான் நேரில் பார்த்ததில்லை, வேள்வி.

சொக்கு : அப்படியானால் ஆசிரமம் எங்கே? நீங்கள் சொன்ன பேர்வழி இருப்பிடம் தெரியவேண்டுமே!

இரிசன் : அதோ தெரிகிறதே. அதுதான் ஆசிரமம். அங்கே போய்ப் பாரதியார் எங்கே இருக்கிறார் என்று கேட்டால் கூறுவார்கள்.

சொக்கு : நன்றி ஐயா, நான் போய் வருகிறேன்.

(மற்றொருபுறம்)

(பாரதியார் இருப்பிடத்தின் முற்புறமிருந்த ஒருவரை நோக்கிச் சொக்கு. "பாரதியாரவர்களைப் பார்க்க வேண்டும்")

கண்ணன் : நீர் யார்?

சொக்கு : நான் அயலூர். ஓர் துறவி.

கண்ணன் : அவரைப் பார்க்க முடியாது. பார்த்தாலும் பேச முடியாது. அவர் மௌன விரதம் பூண்டவர். மேலும், இப்போது யோகத்தில் இருக்கிறார் சுவாமி. அவர் எழுதிய நூற்கள் அநேகம் உண்டு. அவைகளை வாங்கி வாசிக்கலாமே.

சொக்கு : இருந்தால் கொடுங்கள். விலை கொடுக்கிறேன்.

கண்ணன் : விலை அதிகமாயிற்றே.

சொக்கு : அதனால் என்ன? இருக்கட்டும்.

கண்ணன் : இதோ 20, புத்தகங்கள் 55, ரூபாய். 2

(சொக்கு, தன் பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துக் கொடுத்துப் புத்தகங்களை மட்டும் கையில் வைத்துக் கொண்டு! பெட்டியில் நோட்டுக் கற்றைகளைக் கண்ட கண்ணன்)

"பணம் அதிகமாக வைத்திருக்கிறீர்கள். எங்கே தங்கி இருக்கிறீர்கள்? நான் பத்திரமான இடம் காட்டுகிறேன். அங்கு தங்கலாமே!"

சொக்கு : சரி.

(உடனே அடுத்த ஓர் அறையில் சொக்கனைத் தங்கும்படி செய்கிறான் கண்ணன். அங்கே சொக்கன் கையிலிருந்த புத்தகத்தை ஆவலாய்ப் படித்துக் கொண்டிருக்கிறான். கண்ணன் கூடவே ஒருபுறம் உட்கார்ந்திருக்கிறான்)

கண்ணன் : நீங்கள் சுவாமியைக் காணவேண்டும் என்று நினைப்பது எதைக் கருதி?

சொக்கு : நல்வழிப்படவேண்டும் என்பதற்காகத்தான், வேறென்ன?

கண்ணன் : உங்களைப் பார்த்தால் அறிஞராய்த் தெரிகிறது. உங்களைச் சந்திப்பதில் சுவாமிகளுக்கு விருப்பம் இருக்கும். நான் கேட்டுச் சொல்லுகிறேன்.

சொக்கு : அப்படியானால் நன்று!

(கண்ணன் சென்று பாரதியாரை நோக்கி)

கண்ணன் : ஒரு துறவி, தாடி மீசையுடன் விளங்குகிறார். சிறுவயது, கையில் அதிகப்பணம் இருக்கிறது. உங்கள் இருபது புத்தகத்தையும் அறுபத்தைந்து ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டார். உங்களைப் பார்க்க வேண்டும் என்று விருப்பப்படுகிறார்.

பாரதி : அவர் எந்த ஊர்?

கண்ணன் : துறவி என்கிறார். ஊரைக் கேட்கவில்லை.

பாரதி : படித்தவராகக் காணப்படுகிறாரா?

கண்ணன் : இருக்கலாம்.

பாரதி : வரவிடுவதுதானே.

கண்ணன் : முதலில், நீங்கள் யோகத்தில் இருப்பதாகக் கூறி விட்டேன். மேலும் நீங்கள் மௌனவிரதமுடையவர் என்றும் கூறிவிட்டேன். பிறகுதான் தெரிந்து அவர் ஓர் பணக்காரர் என்று.

பாரதி : இருக்கட்டும். யோகம் முடிந்துவிட்டது என்றும், சுவாமி துறவிகளிடம் வாய் திறந்து பேசுவது உண்டு என்றும் கூறி அழைத்து வாருங்கள்.

(கண்ணன் சென்று சொக்கனை அழைத்துப் போகிறான்)

சொக்கு : வணக்கம்.

பாரதி : ஆசி இங்கு (அதாவது நான்) எப்போதும் மௌன விரதம், அங்கு (நீ என்றுபொருள்) துறவு கண்டு பேச உடன்பட்டது! மேலும் இன்றுதான் யோகமும் கலைந்தது. எந்த ஊர்? எதற்காக இங்கு?

சொக்கு : தரிசனமே பெரும் பயன்! மேலும் உபதேசம்!

பாரதி : அவ்வாறா? நன்று!

சொக்கு : ஆஸ்ரமத்தில் இடம் இருக்குமோ?

பாரதி : ஆஸ்ரமம் ப்ரயோசனமற்றதாக இருக்கிறது.

சொக்கு : ஆஸ்ரம கர்த்தா?

பாரதி : சாகப் போகிற கிழம். ஒன்றும் பயனில்லை. மெய்யன்பர்கள் சௌகரியப்படி இங்கு (நான்) வேறு - தனியாக அருள் நிலையம் என்பதாக ஏற்பாடு பண்ணியது. அதில் அங்கு (நீ) சௌகர்யமாகத் தாமதிக்கலாம்.

சொக்கு : இவ்வாசிரம கர்த்தா மகாவிஷ்ணு அவதாரமென்று ஸ்வாமி இதோ இந்த நூலில் அருளிச்செய்துவிட்டு அது கிழம் பயனில்லை என்று கிருபை சாதிக்கிறது இப்போது. என்னிடம் அதிகப் பணம் இருக்கிறது. அவைகளைக் கொண்டு தனியாக ஒரு - பெரிய - இதுபோன்று ஆஸ்ரமத்தை ஏற்படுத்த உத்தேசம்.

பாரதி : தனியே எதற்கு?அருள் நிலையத்தில் போட்டு அதை விருத்தி செய்யலாம். இங்கு(நான்)கூடிய சீக்கிரம் அருள் நிலையத்திற்குப் போய்விடுவதாக உத்தேசம் உண்டு. எப்படி?

சொக்கு : சரிதான் தனியாக ஓர் ஆஸ்ரமத்தை ஸ்வாமிகளின் கூட்டுறவால் ஏற்பாடு செய்ய உத்தேசம் அதில் வரும் வருமானத்தில் ஸ்வாமிக்கும் சமர்ப்பித்து விடுவது.

பாரதி : அதில் வருமானம் ஏது?

சொக்கு : பலசரக்குக் கடை இருக்கிறது. ஜவுளிக் கம்பெனி இருக்கிறது. மண்ணெண்ணெய்க் கம்பெனி வைக்கிறார்கள். அவைகளி லெல்லாம் வருமானம் வராமலா?

பாரதி : ஆஸ்ரமம் கம்பெனியாகுமா? அதில் வருமா?

சொக்கு : ஸ்வாமிகளின் மாதச் செலவுக்கு எது ஆதராம்? ஸ்வாமி ஆஸ்ரமம் வேறு, கம்பெனி வேறு என்று நினைக்க லாமோ? ஆஸ்ரமம் சமஸ்கிருதம், கம்பெனி இங்கிலீஷ், இவ்வளவுதானே வித்தியாசம்.

பாரதி : போய் வருகிறீர்களா?

சொக்கு : போகாமல் இங்கு இருக்கவா? தாங்கள் யோகம் ஆரம்பிக்க வேண்டிய நேரமாய் இருக்கலாம். மௌன விரதத்தையும் துவக்க வேண்டும். துவக்குங்கள் வேறு பணக்காரரைச் சந்திக்கும் வரைக்கும். வருகிறேன்.

ஐயோ பாவம்! உம்மை வெறுக்க வேண்டியதில்லை. பொதுமக்களுக்குப் படிப்பை தராது மறுக்கும் இந்தக் காலக் கோளாறு இருக்கிறதே அதைத்தான் வெறுக்க வேண்டும். வணக்கம், ஐயா இருங்கள். (போதல்)

(போனபின் பாரதி, கண்ணனை நோக்கி "இப்படிப்பட்ட பேர் வழிகளையா அழைத்துவர வேண்டும்?")

கண்ணன் : நல்ல மனிதன் என்று நினைத்தேன். அவன் அவ்வாறின்றிப் படித்த மனிதனாயிருந்து விட்டான். நான் என்ன செய்வது?

பாரதி : இந்த இழவில் நீ முதலிலேயே சுவாமிகள் மௌன விரதம் என்றும், யோகத்தில் இருக்கிறார் என்றும் கூறிவிடுகிறாய்.

கண்ணன் : முதலில் அவன் ஏழையென்று நினைத்தேன். பிறகு அவன் பெட்டியில் நிறையப் பணத்தைக் கண்டேன்.

பாரதி : இனிமேல், நன்றாய் மனிதனை ஆ.ராய்ந்து பேச்சை விடு. போய் வா.

(போதல்)

## காட்சி - 14

மல்லியூரில் ஒரு வீதியில் கட்டடம் ஒன்றில் தமிழர் சங்கம் என்ற பலகை தொங்குகிறது. சொக்கன் நுழைகிறான். சங்கத்தின் தலைவர் நெடுமுடியார் தனியாக அங்கு உட்கார்ந்திருக்கிறார்.

நெடுமுடி : யார் நீங்கள்?

சொக்கு : நான் பீலிக்குடி. இப்படித் துறவியாக வந்துவிட்டேன்.

நெடுமுடி : துறவு! அதன் பயன் என்ன ஐயா?

சொக்கு : பேரின்பம்!

நெடுமுடி : யாருக்கு?

சொக்கு : துறந்தார்க்கு!

நெடுமுடி : அதன்பேர் சுயநலம் என்று நினைக்கிறேன்.

சொக்கு : சுயநலமற்ற வழியில் கிடைக்கும் இன்பம்?

நெடுமுடி : அறத்தால் வருவது.

சொக்கு : ஆ, அப்படியா? அறம் என்பதென்ன?

நெடுமுடி : இன்பத்தை அடையும் ஆற்றல்.

சொக்கு : ஆற்றல்! ஆனால் நான் அவ்வறத்தை மேற்கொள்ளுகிறேன். அதுபற்றி இன்னும் விளக்க வேண்டும்.

நெடுமுடி : நல்ல வழியில் பிறருக்கு நலம் செய்க. நீர் எவ்வளவு நலம் புரிகின்றீரோ அவ்வளவாக உமக்கு இன்பம் கிடைக்கும். ஒன்றைப் பிறருக்குக் கொடும். அதனால் உம் உள்ளத்தில் ஏற்படும் இன்பத்தை உற்று நோக்குக. "ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்!" என்றார் வள்ளுவர். பிறருக்கு நீர் உழையும்! நலந் தேடும்! அவ்வுழைப்பும், காலத்துக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

சொக்கு : அறப்பாதையின் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறவேண்டும். அப்பாதை இக்காலத்துக்கும் மக்கள் தேவைக்கும் ஏற்றதாகக் கூற வேண்டுகிறேன்.

நெடுமுடி : இவ்வுலகம் தொழிலால் மேம்படுவது. உலக மக்கள் யாவரும் தொழிலில் ஈடுபட வேண்டியவர்கள். தொழிலாளிகளின் உழைப்பைத் தங்கட்குப் பயன்படுத்துவதால் உழைக்காமல் உண்டு கிடக்கும் முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களின் முதலாளித் தன்மை நிலையானது அன்று! கடலில் மிதக்கும் பனிக்கட்டித் துண்டுகள்! நாளடைவில் தொழிலாளர் என்னும் உலக மக்களோடு அவர்களும் கரைந்து கலந்துவிட வேண்டியது தான். அந்த நிலையில், உலகின் செல்வம் அனைத்தும் அனைவர்க்கும் சமமாகும். யார்க்கும் சம உணவு, யார்க்கும் சரி இருப்பிடம்! ஒத்த கல்வி, சுதந்திரம்.

இந்த நிலையை விரைவில் உண்டாக்க வேண்டும். இன்றைய மக்களின் அறம் இதுதான்.

மக்களின் விருப்பப்படி நடைபெறும் ஆட்சி இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நடைபெறுகிறது. தொழிலாளர் வளர்ச்சிக்கு அந்த நாடுகளின் ஆட்சிமுறை வழி செய்கிறது.

ரஷ்ய நாடு தொழிலாளர் ஆட்சியுடையது. அங்கு மேலே நான் கூறியபடி பனிக்கட்டிகள் இல்லை, நாட்டு மக்கள் என்னும் கடலில் கரைந்து விட்டன. அங்கு உடைமை பொது! அது இன்ப உலகத்தின் ஒருபகுதி ஒளி. உலகத்தின் கூடத்துறை.

துன்ப உலகத்தை இன்ப உலகமாக்கிவிட புத்தர் அன்று பாடுபட்டார். ஆனால் அவர் கையாண்ட முறை சரியில்லை.

தொழிலாளர்களுக்குச் சொந்தமானது இந்த உலகம். இந் நாட்டில் தொழிலாளர்க்கு உரிமை, போதிய வசதி, போதிய உணவு ஒன்றுமில்லை. தொழிலாளர் முன்னேற்றத்திற்கு அவர்களின் கல்விக்கு, அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு பாடுபடுவதே இன்று மேற்கொள்ள வேண்டிய அறம் என்று கூறுவேன். நீவிர் அறம் செய்க. இன்பம் எய்துக ... *

■ ■ ■

* இனிய தமிழில் இயற்றப்பட்ட இந் நாடகம் முற்றுப் பெறவில்லை.